**1.1 மறுப்பு அபிப்பிராயம்**

சீ.டபிள்யூ.ஈ. நிர்மாணம் மற்றும் பொறியியல் (தனியார்) கம்பனியின் (கம்பனி) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப நட்டக் கூற்று, ஏனைய விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

எனது அறிக்கையின் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தி 1.5 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் ஒன்றை நான் தெரிவிக்கவில்லை.

**1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுப்பிற்குள்ளாக்கப்படுகின்றது.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிறுவனங்களுக்கான இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களிற்கான கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வை மேற்கொண்டு கணக்காய்வாளர் அறிக்கையை வழங்குதல் எனது பொறுப்பாகும். எவ்வாறாயினும் மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் மீது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றினை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளளேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | முகாமைத்துவத்தின் கருத்துரை | | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | 2016 ஏப்ரல் 01 இல் உள்ளவாறு வங்கி மீதியில் ரூபா 278,519 ஆன இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களில் வியாபார கடன்கொடுத்தோரின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது. | | எதிர்வரும் ஆண்டிற்காக கணக்குகள் தயாரிக்கும் போது குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளைப் பரிட்சித்து சரிசெய்யப்படும். | | இணக்கம் செய்யப்படாத வேறுபாடுகள் தீர்த்து வைக்கப்படல் வேண்டும். |
| | | | | | |
| (ஆ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வியாபார கடன்கொடுத்தோர் மீதியில் உள்ளடக்கப்பட்ட மறை மீதியின் காரணமாக வியாபார கடன்கொடுத்தோர் ரூபா 1,036,479 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | எதிர்வரும் ஆண்டிற்காக கணக்குகள் தயாரிக்கும் போது குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளைப் பரிட்சித்து சரிசெய்யப்படும். | | மறை மீதியாக காண்பிக்கப்படுகின்ற கடன்கொடுத்தோர் மீதியை பகுப்பாய்வு செய்து நிதிக் கூற்றுக்களில் சரியான மீதி காண்பிக்கப்படல் வேண்டும். |

### 1.5.2 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்றுகள் | முகாமைத்துவத் தின் கருத்துரை | பணிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (i) | வருமானம் | 59,183,024 | பட்டியல்கள், நிர்மாண ஆவணங்கள், அளவிடைப் பத்திரங்கள் அளவிடைப் பத்திரங்கள், ஒப்பந்த உடன்படிக்கை, ஆற்றப்பட்ட வேலை அறிக்கை மற்றும் நிலையான வைப்புச் சான்றிதழ் | எதிர்வரும் ஆண்டிற்கான கணக்குகள் தயாரிக்கும் போது குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளை பரீட்சித்து சரிசெய்யப்படும். | பெறுமதிகளை உறுதிப்படுத்துவதற்காக எழுத்து மூல சான்றுகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| | | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | செலவினம் | 23,418,395 | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள், பட்டியல்கள் மற்றும் பொருள் பெறுவனவுக் குறிப்பு | -மேற்படி- | -மேற்படி- |
| | | | | | |
| (iii) | செலுத்த வேண்டியவைகள் | 223,057,870 | பட்டியல்கள், ஒப்பந்த உடன்படிக்கை | -மேற்படி- | -மேற்படி- |
| | | | | | |
| (iv) | சொத்துக்கள் | 181,899,900 | கொடுப்பனவு உறுதிச் சீட்டுக்கள் மற்றும் பட்டியல்கள் | -மேற்படி- | -மேற்படி- |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 5,218,061 ஆன பெறவேண்டிய நான்கு மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டிற்காக கணக்குகள் தயாரிக்கும் போது குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளைப் பரிட்சித்து சரிசெய்யப்படும். | பெறவேண்டிய மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டியவைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2016 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்ட ரூபா 27,750 ஆன இனங்காணப்படாத வைப்பு மீதிகள் 2019 ஆம் ஆண்டில் இருந்து முன்கொண்டுவரப்பட்ட ரூபா 14,250 ஆன தலைவருக்குச் செலுத்த வேண்டிய சம்பளம் மற்றும் ரூபா 1,542,115 பெறுமதியுடைய ஆலோசனைக் கட்டணம், அட்டுறு செலவினங்களில் உள்ளடக்கப்பட்ட போதிலும் 2020 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் இனக்கம் செய்து தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டிற்காக கணக்குகள் தயாரிக்கும் போது குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளை பரீட்சித்து சரிசெய்யப்படும். | மீதிகளை இணக்கம் செய்வதற்கும், தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| (i) | 5.1 ஆம் பிரிவு | கம்பனியால் 2012 ஆம் ஆண்டு முதல் கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் ஆண்டிற்காக கணக்குகள் தயாரிக்கும் போது குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளை பரீட்சித்து சரிசெய்யப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 5.2.5 ஆம் பிரிவு | வருடாந்த பாதீடு தயாரித்து பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) | 7.4.1 ஆம் பிரிவு | கம்பனியால் கணக்காய்வு குழு ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iv) | 9.2 ஆம் பிரிவு | கம்பனிக்கான பதவியணியினர் தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஆ) | 2014 பெப்ரவரி 17 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை | மீளாய்வாண்டிற்காக கம்பனியால் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | -மேற்படி- | -மேற்படி- |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து கிடைத்த விளைவுகள் ரூபா 3,860,219 நட்டமாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் இலாபம் 570,924 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,431,143 வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சிக்கு நிர்வாக மற்றும் தாபன செலவினம் ரூபா 9,717,297 இனால் குறைவடைந்தமைக்கு எதிராக தேறிய வருமானம் மற்றும் தேறிய நிதி வருமானம் ரூபா 14,171,553 இனால் குறைவடைந்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனி கூட்டுறவு மொத்த விற்பனை தாபனத்திற்குரிய கட்டிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. எனினும், கட்டிடத்திற்காக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டிற்காக கணக்குகள் தயாரிக்கும் போது குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளை பரீட்சித்து சரிசெய்யப்படும். | கம்பனி ஸ்தாபிக்கப்பட்டுள்ள கட்டிடத்திற்காக வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆம் திகதிய பொது முயற்சிகள் சுற்றறிக்கை பீஈடீ/12 இன் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்படவேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் 27 தாமதத்தின் பின்னர் 2023 யூன் 21 ஆம் திகதி கணக்காய்வு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டிற்காக கணக்குகள் தயாரிக்கும் போது குறிப்பிடப்பட்டுள்ள பிரச்சினைகளை பரீட்சித்து சரிசெய்யப்படும். | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |